**தலைப்பு 116 – வர்த்தக அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மீண்டெழும் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலக்கம் 116-1-2-1202 என்ற செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட வேண்டிய எரிபொருள் செலவினம் ரூபா 351,407 தொகை, இலக்கம் 116-1-2-1409 மற்றும் இலக்கம் 116-1-2-1205 என்ற செலவின விடயங்களில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த அளவினால் எரிபொருள் செலவினம் குறைத்தும் மற்றும் ஏனைய செலவினம் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2187/27 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 2020.08.09 ஆந் திகதி அமைச்சு தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2020 இன் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் இலங்கை கணக்காளர் சேவையின் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமையின் காரணமாக இந்தக் குறைபாடுகள் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த தவறு ஏற்படாமல் இருப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) இலக்கம் 116-1-2-1301 என்ற வாகன பழுதுபார்த்தல் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 259,938 தொகையான செலவினம் இலக்கம் 116-1-2-1409 என்ற வாகன பராமரித்தல் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக அந்த அளவினால் வாகன பராமரிப்புச் செலவினம் அதிகரித்தும் வாகன பழுதுபார்த்தல் செலிவனம் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் மோட்டார் வாகனங்களின் கிரயமாக ரூபா 79,900,500 காண்பிக்கப்பட்ட போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 80,400,000 ஆனமையால் ரூபா 499,500 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த பெறுமதியில் இலக்கம் WP PF-0051 என்ற வாகனத்தின் பெறுமதி ரூபா 6,000,000 ஆக இருக்க வேண்டியிருந்ததுடன் அப்பெறுமதி தவறவிடப்பட்டுள்ளது. அவ்வாறே WP CAS-2163 என்ற வாகனத்தின் 2021.12.31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 28,500,500 ஆகும். அது இந்த ஆண்டில் ஒதுக்க பெறுமதியாக மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 35,000,000 ஆகும். அதன் பிரகாரம் 2021.12.31 இல் உள்ளவாறு மோட்டார் வாகனங்களின் கிரயம் உள்ளபடியாக ரூபா 79,500,500 ஆகும். | நிதி நிலைமைக் கூற்றில் மோட்டார் வாகனங்களின் கிரயம் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்கின் மீதி ரூபா 17,671,336 ஆக இருந்த போதும் முற்பண ''பீ'' கணக்கின் தனிப்பட்ட மீதிகளின் பட்டியல்களின் பிரகாரம் மீதி ரூபா 17,767,595 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 96,259 அதிகரித்து தனிப்பட்ட மீதி பட்டியலில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஏப்ரல் மாதம் ரூபா 26,259 தொகையான இடர்கடன், வீட்டுக்கடன், ஆதனக் கடன் வட்டி தவறுதலாக 116012 இல் செலவு வைக்கப்பட்டமை மற்றும் 2021 ஏப்ரல் மாதம் செலுத்தப்பட்ட விழா முற்பணத்தின் கொடுப்பனவு ரூபா 70,000 தொகை பதியப்படாமை போன்றவற்றின் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாதம் கணக்கு பொழிப்பின் மூலம் இந்த தவறு சரிசெய்யப்பட்டுள்ளது. | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதி முற்பணம் ''பீ'' கணக்கின் தனிப்பட்ட மீதி பட்டியலுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | தற்போது பொறுப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச்செல்லப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தினந்தோறும் பரீட்சிக்கப்பட வேண்டிய வகையில் பொறுப்பு பதிவேட்டில் அப்பொறுப்புக்கள் குறிப்பிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,900,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | அரச செலவின முகாமைத்துவத்தில் அத்தியவசிய செலவினத்தை மாத்திரம் செய்தல் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் கட்டுநிதி விடுவிக்காமை இதற்கான காரணமாகும். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நிகழ்ச்சித் திட்டம் 01 இன் 06 செலவின விடயங்களுக்காக ரூபா 43,000,000 தொகை மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 02 இன் செலவின விடயத்திற்காக ரூபா 1,050,000,000 ஆக ரூபா 1,093,000,000 குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அது ஒவ்வொரு செலவின விடயத்தின் நிதியேற்பாட்டில் 33 சதவீதம் 223 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | அமைச்சு புதிய கட்டிடம் ஒன்றில் தாபிக்கப்பட்டதன் காரணமாக அமைச்சின் குறிப்பின் மூலம் மேலதிக நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்ளல், நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் குறைநிரப்பு மதிப்பீட்டை பெற்றுக்கொள்ளல், பயிற்சி பெற்ற பட்டதாரிகளை நிரந்தரமாக்கும் அடிப்படையில் சம்பளம் செலுத்துவதற்காக மேலதிக நிதியேற்பாடு கோரப்பட்டமை, | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் போதியளவில் இல்லாமை மற்றும் சதொச, லங்கா சதொச நிறுவனங்கள் பெறப்பட்ட கடன் பணம் நிதியீட்டத்திற்குத் தேவையான நிதியேற்பாட்டிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (இ) | செலவினத் தலைப்பின் கீழ் நிகழ்ச்சித் திட்டம் 01 இல் 10 செலவின விடயங்களுக்காக ரூபா 15,610,300 தொகை வீரமன் நடைமுறையின் கீழ் மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அது ஒவ்வொரு செலவின விடயத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் 33 சதவீதம் முதல் 258 சதவீதம் வரையிலான வீச்சைக் கொண்டிருந்தது. | நிதியேற்பாடு போதியளவு இல்லாமையின் அடிப்படையில் ஏனைய செலவின விடயங்களிலிருந்து மாற்றவேண்டி ஏற்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | 2021 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் இலக்கம் 116-2-5-3-2202 செலவின விடயத்திற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் அதற்காக இலக்கம் 116-2-5-1-2202 செலவின விடயத்தில் இருந்து நிதிப்பிரமாணம் 66/69 மாற்றல்களின் கீழ் ரூபா 45,500,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | மன்னார் மாவட்டத்தில் தராபுரம் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கேட்போர்கூட நிர்மாணம், தாராபுரம் வேலை சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மாநாட்டு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு உரியதாக மேலும் ரூபா 45,438,332.60 பட்டியல்கள் செலுத்தவேண்டி இருந்ததுடன் அதற்கான நிதியேற்பாடு 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படாதிருந்தமையால் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு விடயத்தில் குறிப்பிடப்பட்ட பணிகள் தவிர ஏனைய நோக்கங்களுக்காக செலவிட முடியாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றாதிருத்தல் வேண்டும். எனினும் அதற்கு முரணாக இலக்கம் 116-1-2-0-1003 செலவின விடயத்திற்காக ரூபா 4,250,000 குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு பெறப்பட்டு அதில் ரூபா 2,238,500 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றல்களின் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | இலக்கம் 116-1-2-0-1003 செலவின விடயத்திற்காக நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு விசேடமாக குறிப்பிடப்பட்ட பணிகள் தவிர ஏனைய நோக்கங்களுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்ற முடியாது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் கொடுப்பனவுகள் தொடர்பான தெரிவு பரிசோதனையின் போது 2021 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 3,481,619 தொகையான பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | போதியளவான நிதியேற்பாடு இல்லாமையால் 2021 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது செலுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சரியாக அறிக்கையிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 05 செலவின விடயத்தின் கீழ் சேமிப்பை விஞ்சிய பொறுப்புக்கள் ரூபா 3,212,273 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சேமிப்பை விஞ்சிய பொறுப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்ததற்காக தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,018,780 தொகை 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்படாதிருந்ததுடன் அது பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | செலுத்த வேண்டிய பணம் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| **அவதானிப்புக்கள்** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| 2010 மே 14 ஆந் திகதிய அரச செலவின முகாமைத்துவம் தொடர்பிலான சனாதிபதி அலுவலக சுற்றறிக்கை | அமைச்சருக்கும், அமைச்சரினது பதவியணியினருக்காகவும் பயன்படுத்தக் கூடிய ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்த போதிலும் அமைச்சினால் அதற்காக 11 உத்தியோகபூர்வ வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சருக்காக பயன்படுத்தக் கூடிய ஆகக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கையை விஞ்சி வாகனங்கள் வழங்கப்படாதிருந்த துடன் வாகனங்களை பழுதுபார்த்தல் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களின் போது அதற்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் இந்தக் கணிப்பீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றின் அட்டவணை (viii) இல் 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இன் ஆலோசனைக்கமைய ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2021.12.31 இல் உள்ளவாறான நிலைமை அறிக்கை, அமைச்சிற்குரிய வங்கிக் கணக்குகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | திறைசேரி செயற்பட்டு சுற்றறிக்கை 2015/03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2021.12.31 இல் உள்ளவாறு நிலைமை அறிக்கையில் அமைச்சிற்குரிய வங்கிக் கணக்குகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

அமைச்சின் நோக்கங்களுக்கிடையே கீழே காண்பிக்கப்படுகின்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய சந்தை கொள்கையின் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களின் உரித்தை பாதுகாக்கும் வகையில் சந்தை செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றாக சுங்கவரி கொள்கையை அமுல்படுத்துதல் மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்காக வரிச் சலுகை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல். | தேசிய சந்தை கொள்கையை நாளதுவரையாக்கும் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அமைச்சின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்குரிய தரவு முறைமையொன்றை பேணிச் செல்லல், அந்த தரவு முறைமையை நாளதுவரையாக்குதல் மற்றும் அந்த தரவுகளை வெளித்தகவல்களை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தும் பொறிமுறையொன்றை தயாரித்தல். | அரசாங்கத்தின் கணக்குகள் குழுவிலிருந்து வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் தரவு முறைமையொன்றை நாளதுவரையாக்குதல் மற்றும் அது தொடர்பாக செயற்படுகின்ற நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர் களுக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2008 ஏப்ரல் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நாடு முழுவதும் காணப்படுகின்ற உணவு திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்களில் மெற்றிக் தொன் 100,000 பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை பேணிச் செல்லுதல் பிரதான பணியாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் கடந்த ஆண்டில் திணைக்களத்தால் அரிசி இருப்பு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டின் போது தெற்காசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் தேவையின் அடிப்படையில் இலங்கையில் அரிசி மெற்றிக்தொன் 8000 பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை பேணிச் செல்வதற்காக ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஒக்தோபர் மாதம் வரையிலும் பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை பேணிச் செல்வதற்காக இந்த நிதியேற்பாட்டை பயன்படுத்திக் கொள்ளாமை காரணமாக இந்த நிதியேற்பாடு அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த பணிகள் 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் | 2021 ஆம் ஆண்டில் அரசிக்காக அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அரசாங்கத்தால் அந்தக் கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதுடன் உள்நாட்டு சந்தையில் விரைவாக அரிசி விலை உயர்வடைந்து சென்றது. இதற்கு தீர்வாக அரிசி இறக்குமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த துடன் பாதுகாப்பு அரிசி இருப்பொன்றை வைத்துக் கொள்வதற்காக உணவு ஆணையாளர் திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தின் மூலம் அரிசி இறக்குமதி செய்து சதொச ஊடாக நாடு முழுவதும் பகிர்ந்தளிப்பதற்காக அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் மூலம் நாட்டில் அரிசி சுழற்சி ஏற்படுத்தி அரிசி விலையை கட்டுப்படுத்துவதற்கு | நாட்டில் அரிசி இருப்பொன்றை பேணிச் செல்வது தொடர்பாக அமைச்சினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மூலம் நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட பணியாக இருந்த போதிலும் நாட்டில் அரிசி இருப்பொன்றை பேணிச் செல்லுதல் தொடர்பாக அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட இந்தப் பணத்தை மீண்டும் உணவு ஆணையாளரிடமிருந்து அறவிடுவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்குரிய 13 களஞ்சியங்களை நவீனமயப் படுத்துவதற்காக கூட்டுத் தாபனத்தினால் ரூபா 82,525,681 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 62,490,367 செலவினம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த சகல களஞ்சியங்களையும் நவீனமயப் படுத்துவதற்கான ஒப்பந்த கையளித்தல் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் ஒப்பந்தக் காலம் 30 நாட்கள் முதல் 180 நாட்கள் வரையான காலவீச்சினைக் மேற்கொண்டிருந்தது. எனினும், 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் 06 களஞ்சியங்களை நவீனமயப்படுத்தும் சந்தர்ப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஏனைய 07 களஞ்சியங்களின் நவீனமயப் படுத்தல்களின் செயல்முன்னேற்றம் 05 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையில் காணப்பட்டது. நிதியேற்பாடு வழங்கி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடக்கும் வரை இந்த களஞ்சியத்தை நவீன மயப்படுத்தும் செயற்பாடுகளை பூர்த்தி செய்யாமை தொடர்பாக அமைச்சின் மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை. | அரச கணக்குகள் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் உரிய நிறுவனங்களுக்கு இது தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்பார்வை பணிகள் சரியான முறையில் நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் முறையான மதிப்பீடொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் 5.6 வழிகாட்டியின் பிரகாரம் மாதிரி தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் உடனடியாக பெறக்கூடிய பெறுமதி குறைந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஏற்படுகின்ற பெறுகை பணிகளுக்காக சந்தை விலை ஒப்பீட்டு முறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் ரூபா 03 மில்லியன் தொகையான மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுக்காக சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) இரண்டாவது கட்டத்தில் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது பதிவு செய்துள்ள வழங்குனர்களிடமிருந்து கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 4,380,559 ஆன அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்த நிறுவனம் அமைச்சில் பதிவு செய்த வழங்குனராக இருக்கவில்லை. | - மேற்படி - | அமைச்சில் பதிவு செய்த வழங்குனர் களிடமிருந்து கேள்வி கோரப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கேட்போர் கூடத்திற்காக கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரப்படாதிருந்ததுடன் அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வழங்குனர் ஒருவர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 3,289,500 செலவிடப்பட்டிருந்ததுடன் இது பெறுகைகள் நடைமுறைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சு அலுவலகத்தின் உள்ளக நிர்மாணம் மற்றும் அலுவலகங்களை பகுதிகளாக பிரித்தல் என்பவற்றை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | இலக்கம் 116-1-2-0-2001 இன் கீழ் மேற்கூறப்பட்ட விடயத்தை நிறைவேற்றுவதற்காக ரூபா 22,000,000 நிதியேற்பாடு மாத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சினால் அந்த எல்லையினை விஞ்சி ரூபா 35,032,625 மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | இதற்காக மேலதிக நிதியேற்பாடு ரூபா 20 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ரூபா 35,032,625 பெறுமதியில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் செலவினம் செய்யப்பட்டுள்ளது. | மதிப்பீடொன்றை தயாரிக்கும் போது நிதியேற்பாட்டின் அளவு தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.3(அ) இன் பிரகாரம் அறிவித்தல் பிரசுரித்தல் பொருளாதார ரீதியில் பாதகமாக இருந்தமையால் குறைந்த வருமானம் உடைய விடயங்களின் பெறுகைகளுக்காக அல்லது தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்ற விடயங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களை பதிவுசெய்ய வேண்டியிருந்த | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் ரூபா 35 மில்லியனை விஞ்சுகின்ற மேற்கூறப்பட்ட பணிகளுக்காக பதிவுசெய்த வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்தது. | | |
| (iii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.16(அ) இன் பிரகாரம் கேள்விதாரர்களுக்கு மாற்றுகேள்வி சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்குவதாயின் அது தொடர்பாக கேள்வி ஆவணங்களில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் கேள்வி கோரல் ஆவணங்களில் அது தொடர்பாக குறிப்பிடப்படாதிருக்கும் போது 02 நிறுவனங்களினால் மாற்றுகேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த மாற்றுகேள்வி, கேள்வி மதிப்பீட்டு பணிகளுக்காக கருதப்பட முடியாதிருந்த போதிலும் ஒரு தனியார் நிறுவனமொன்று சமர்ப்பித்த மாற்றுக்கேள்வி மதிப்பீட்டு பணியின் போது கவனத்தில் கொள்ளப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.<br><br>இந்த மாற்றுக்கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்தை விட குறைந்த பெறுமதியுடைய கேள்வி சமர்ப்பித்த 03 நிறுவனங்கள் காணப்படும் போது மேற்கூறப்பட்ட நிறுவனத்திலிருந்து சமர்ப்பித்த ரூபா 14,019,655 ஆன மாற்றுக் கேளிவியின் அடிப்படையில் அந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.16(ஆ) இன் பிரகாரம் மாற்று கேள்வியொன்று கேள்வி காப்புறுதியின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மதிப்பீட்டுடன் 60 சதவீதமான முரண்களுடன் உள்ள கேள்விக்காக அவ்வாறான கேள்வி காப்பீடொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்த பெறுமதியின் அடிப்படையில் 05 சதவீத செயலாற்றல் காப்புறுதியும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 02/2017 இன் 02(i) ஆம் பந்தியின் பிரகாரம் பதிவு உரித்து காணப்படாமல் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள், பதிவு உரித்துள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவுசெய்வதற்கோ அல்லது பதிவு உரித்து உள்ளதாயின் நிறுவனத்திற்கு முறையாக கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எனினும் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 24 வாகனங்கள், ஏனைய அரசாங்க நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 07 வாகனங்களை மாத்திரம் இந்த அமைச்சிற்கு கையேற்பதற்கு 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அதில் 04 வாகனங்களை கையேற்பதற்காக கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அனுமதி கிடைத்திருக்கவில்லை. மேலும் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள அமைச்சின் பிரதி அமைச்சாக 2187/27 ஆம் இலக்க 2020.08.09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டமையின் காரணமாக 03 வாகனங்களின் பதிவுப் பெயரை மாற்றுவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சனாதிபதி செயலகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள Land Rover Discovery வகையான ஜீப் வண்டி ஒன்று அமைச்சு ஆரம்பம் முதல் விளைவற்று தரித்து வைக்கப்பட்டிருந்தது. கொழும்பு மாநகர சபையின் தொழில்நுட்ப இயந்திரவியல் பொறியியலாளரால் முன்னாள் காணப்பட்ட உள்நாட்டு வியாபார, உணவு பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சின் செயலாளருக்கு 2020 மார்ச் 07 ஆந் திகதி வாகனத்தில் காணப்படுகின்ற வழுக்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் தொடர்பான பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வாகனத்திற்கான மதிப்பீடு கோரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் 2020 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் 350 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 791,910 ஆக இருந்தது. இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை போன்ற அடிப்படை விடயங்கள் உள்ளடக்கப்படாமை, 831 பக்கங்களையுடைய அறிக்கையின் பரப்பு அதிகரித்தமையின் காரணமாக பாராளுமன்றத்தினால் அதன் பிரதிகள் நிராகரிக்கப்பட்டிருந்தமையால் அதற்காக செலவிடப்பட்ட கிரயம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | பாராளுமன்றத்திற்கு இரண்டாவதாக சமர்ப்பிக்கப்பட்ட 270 பிரதிகள் மேலதிக கிரயங்களை செய்யாமல் அமைச்சின் வளங்களை பயன்படுத்தி அச்சிடப்பட்டிருந்தது. | உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு பொறுப்புக்கள் கையளிக்கப்பட வேண்டியிருந்த துடன் உரிய அதிகாரத் தரப்பினரின் பரிந்துரையின் அடிப்படையில் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

(அ) 2020 மே மாதம் 07 ஆந் திகதிய அமப/20/0722/218/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்துடன் அமுல்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு தொழிற்படு மூலதனத்தை வழங்கி அவர்களுக்கு மீண்டும் நெல் ஆலைகளை செயற்படுத்தி விற்பனை செய்வதற்காக சதொச நிறுவனத்திற்கு அல்லது பாதுகாப்பு இருப்பாக பேணிச் செல்ல வேண்டியதற்கான உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு அரிசியினை வழங்குவதற்கு தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில் 2020 ஆம் ஆண்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு துரிதமாக கடன் சலுகையை வழங்கும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரிசி ஆலை உரித்துள்ள கூட்டுறவு சங்கங்களுக்காக முன்னுரிமை வழங்குதல், 2020 சனவரி மாதத்தில் அமுல்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட சலுகை பொதியில் கடன் வசதிகள் பெற்றுக்கொள்ளப்படாத ஆலை உரிமையாளர்கள் இருந்தமை மற்றும் வங்கிக் கடன் தவணை செலுத்தாமல் புறக்கணித்திருந்தமை போன்ற குறிகாட்டிகளின் கீழ் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i). இந்த செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் ரூபா 266.7 மில்லியன் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 109 மில்லியன் கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. இந்த கடனை வழங்கும் போது ஒவ்வொரு அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய கடன் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களினதும் சகல அங்கத்தவர்களினாலும் பெறப்பட்ட வங்கிக் கடனில் செலுத்தப்படாத மொத்த கடன் அளவு மற்றும் செலுத்த வேண்டிய மாதாந்த தவணை பணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு சங்கங்களுக்காகவும் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய கடன் அளவு என்பன தீர்மானிக்கப்பட்டிருந்தது. கடன் வழங்க வேண்டிய தரப்பினர்கள் தொடர்பாக காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக பாதிப்பிற்கு உட்பட்ட | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் வழங்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் அமைச்சின் மூலம் நேரடியாக மேற்பார்வை செய்வதற்காக இதுவரை தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்திட்டம் தொடர்பாக மேற்பார்வை பணிகள் சரியாக நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினரால் நீதிமன்ற நடவடிக்கைகளில் தொடர்புபட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட 03 ஆவது நிபந்தனைக்கு முரணாக கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிலைமையை தவிர்ப்பதற்காக அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ii). | 2020 ஆம் ஆண்டின் போது புத்தளம் மாவட்டத்தில் அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களுக்காக ரூபா 10,000,000 கடன் தொகை வழங்குவதற்கு கூட்டுறவு ஆணையாளர் பரிந்துரை செய்திருந்த போதிலும் அதற்காக ரூபா 70,000,000 வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுறவுச் சங்கங்களுக்காக கடன் வழங்கும் போது கூட்டுறவு ஆணையாளரின் பரிந்துரையை விஞ்சி கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக அமைச்சின் மேற்பார்வை பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

(ஆ) உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் மற்றும் வலுவூட்டும் பிரதான நோக்கமாகக் கொண்டு அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தின் மூலம் அரச பொறுப்புடன் செலவிடக்கூடிய தொகைக்கு அத்தியவசிய உணவுப் பொருட்களை உள்ளடக்கிய உள்நாட்டு உற்பத்திகளை பகிர்ந்தளிக்கும் நோக்கில் சிறிய விற்பனைக் கடைகள் வலையமைப்பு ஒன்றை நாடு முழுவதும் ஸ்தாபிப்பதற்காக Q Shop எண்ணக்கரு 2020 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் Q Shop இல் 20 விற்பனை கடைகள் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 34,319,291 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் 2022 மார்ச் 28 ஆந் திகதி வரையும் 08 விற்பனைக் கடைகள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் குழு வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்திட்டம் தொடர்பான மேற்பார்வை பணிகள் சரியாக நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ii) இந்த விற்பனை கடைகள் கொள்கலன் பெட்டியை நவீனமயப்படுத்தி நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தால் 20 கொள்கலன் பெட்டிகளுக்காக செலவிடப்பட்ட முதலீட்டு பணமாக அமைச்சினால் 2021 சனவரி 26 ஆந் திகதி ரூபா 7,200,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் 07 விற்பனைக் கடைகள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கொள்கலன் அளவுகள் கொள்வனவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது அந்த பணம் செலவிடப்பட்ட முறை தொடர்பாகவோ அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அமைச்சினால் விடுவிக்கப்பட்ட பணத்தை ஈடுபடுத்துதலின் வினைத்திறன் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 20 விற்பனைக் கடைகளை நிர்மாணிப்பதற்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் அந்த நிறுவனத்துடன் எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. செலவினங்களை மீளளிப்பு செய்யும் போது இது தொடர்பாக அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | செயற் திட்டத்திற்கான செலவினங்களை மீளளிப்புச் செய்யும் போது எழுத்துமூல உடன்படிக்கை உள்ளடக்க வேண்டியமை தொடர்பாக அமைச்சின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (iv) | 2020 திசெம்பர் 22 ஆந் திகதிய அமப/20/1909/313/035 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 20 Q Shop ரூபா 50,000,000 மதிப்பீட்டின் கீழ் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒரு விற்பனை கடைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,500,000 ஆக இருந்த போதிலும் அந்த தொகையை விஞ்சி 05 விற்பனைக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட மேலதிக கிரயம் ரூபா 10,872,604 ஆக இருந்தது. | - மேற்படி - | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விஞ்சாத வகையில் செலவினங்களை செய்வது தொடர்பில் சரியான மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (இ) | அரச ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 1,752,813 தொகை, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 396,041 மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 11,088 என்பவற்றை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் இந்த அமைச்சின் சிரேஷ்ட நிலையில் அநேகமான பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் உரிய உத்தியோகத்தர்களை அந்த நிதியத்தில் பதிவு செய்தல் தாமதமடைந்திருந்தது. உரிய உத்தியோகத்தர்கள் அந்த நிதியங்களில் பதிவு செய்து பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பெறுமதி தீர்த்து வைக்கப்படுகின்றது. | அரச ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டிய பணம் தாமதமின்றி அனுப்பி வைக்கப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான பொருளாதார முன்னேற்றமொன்றை ஏற்படுத்துவதன் மூலம் சலுகை விலை முறைமையின் கீழ் வறுமையை குறைக்கும் நோக்கத்துடன் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான "Q Shop" சந்தை விற்பனைக் கடை வலையமைப்பை ஸ்தாபிப்பதற்கு உரிய ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சந்தையில் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் விலைத்தளம்பல்களை தடுப்பதன் மூலம் நுகர்வோர்களை பாதுகாப்பதற்காக "ரஜவாச" செயற்திட்டத்தின் கீழ் கடை தொகுதி வலையமைப்பை செயற்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நிறைவேற்றும் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பது போல சந்தையில் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் விலைத் தளம்பல்களை தடுப்பதன் மூலம் நுகர்வோர்களை பாதுகாப்பதற்காக "ரஜவாச" செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. நாரஹேன்பிட்டயில் ரஜவாச செயற்திட்டம் வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதுடன் மட்டக்களப்பு ரஜவாச செயற்திட்டம் காணப்பட்ட நெருக்கடியான நிலைமைக்கு இடையே குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சிரேஷ்ட நிலையில் 07 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அமைச்சிற்கு நியமிக்கப்பட்ட இரண்டாம் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 55 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான | 2022.05.04 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம் திட்டமிடல் பதவி வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளதுடன் சட்ட உத்தியோகத்தர் / சட்ட ஆலோசகர் போன்ற உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றுச் சென்றிருந்ததுடன் மீண்டும் ஆட்சேர்ப்பதற்காக | சேவை தேவையினை கவனத்தில் கொண்டு சிரேஷ்ட நிலையின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினர் 24 ஆனமையின் காரணமாக 31 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | விரிவான புள்ளியிடல் கூற்று அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2020.08.09 ஆந் திகதிய வர்த்தமான பத்திரத்தின் பிரகாரம் 2020.08.20 ஆந் திகதி தாபிக்கப்பட்ட இந்த அமைச்சில் காணப்படுகின்ற குறைபாடுகளை தீர்ப்பதற்காக 2021.11.23 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை ஏற்றமதி அபிவிருத்தி சபைக்கு நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 174 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 276 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி 102 பேர் மிகையாக காணப்பட்டனர். | இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான நிதியேற்பாடு உரிய பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பேணிச் செல்ல வேண்டும். |